1995 ஏப்ரல் 19]

351—

அனுமதியின்றி மணல் எடுப்பதைத் தடுக்க நடவடிக்கை

***33175—** திரு. இரா. அப்பு நடேசன்:

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆறுகளில் அனுமதி இல்லாமல் மணல் எடுப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இதனால் பாலங்கள், சப்பாத்துக்கள் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளதால் அரசு எடுத்த மேல் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): குழித்துறை ஆற்றிலுள்ள குடிநீரைப் பாதுகாப்பது கருதி மாவட்ட ஆட்சித் தலைவர் அமைத்த உயர் அதிகாரிகள் குழு தேர்வு செய்து. நான்கு இடங்களில் மட்டுமே குத்தகைகள் வழங்கப்பட்டு மணல் எடுக்க அனுமதிக்கப்பட்டது. அனுமதி வழங்கப்படாத இடங்களிலும் மற்றும் குடிநீர் கிணறுகளுக்கு அருகில் மணல் எடுப்பதைத் தடுக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகளை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்துள்ளார்: (1) மாவட்டம் முழுவதும் மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்களைத் தடுக்க தடைக் கற்கள் போடப்பட்டுள்ளன. (2) அரசுக்குச் சொந்தமான ஆற்றுப் படுகைகளில் கள்ளத்தனமாக மணல் எடுப்பவர்கள், பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்தல், திருடுதல் போன்ற குற்றங்கள் செய்வோர் மீது காவல்துறை ஒத்துழைப்போடு நீதிமன்ற நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆலோசனைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. (3) அனுமதியின்றி மணல் எடுக்க உபயோகப்படுத்தும் சாதனங்களை பறிமுதல் செய்ய ஆணையிடப்பட்டு உள்ளது. (4) பட்டா நிலங்களில் பாறை மற்றும் மணல் சேமிப்பினை ஊக்கப்படுத்தும் தனியார் மீது குற்றவியல் தடுப்புச் சட்டம் பிரிவு 133-ன் கீழ் கோட்ட ஆட்சியர் வாயிலாக மேல் நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது. (5) மாவட்டத்திலுள்ள அனைத்து சோதனைச் சாவடிகளிலும் நடைச் சீட்டு இல்லாமல் கனிமங்கள் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (6) பாலங்கள் மற்றும் குடிநீர் வடிகால் ஆகியவற்றிற்கு அருகில் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டு இருக்கிறது.(7) மாவட்டச் சட்டம் மற்றும் ஒழுங்கு ஆய்வுக் கூட்டத்தில் இப்பிரச்சினை சேர்க்கப்பட்டு இப்படிப்பட்ட செயலாக்கத்தை தடுக்க அரசு இயந்திரம் முடுக்கி விடப்பட்டுள்ளது. (8) பாலங்கள் மற்றும் மத்திய மாநில அரசு நிறுவனங்கள் குடிநீர் கட்டமைப்புகள், கிணறுகள் ஆகியவற்றுக்கு 200 மீட்டர்

சுற்றளவுக்கு குவாரி செய்யக்கூடாது என்று தமிழ்நாடு சிவில் கனிம நிறுவன விதியில் அண்மையில் அரசு ஆணை எண்.166 நாள் 16-6-1994ல் புதிய சட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (9) கள்ளத்தனமாக மணல் எடுத்துச் செல்லும் வாகனங்கள் மீது கட்டாயமாக ரூபாய் 10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்த அறிவிப்புக்கு இணங்க விதிகள் திருத்தப்பட்டு இப்போது குறைந்தபட்ச அபராதமாக ரூ.10,000 விதிக்கப்படுவதால் கள்ளத்தனமாக மணல் எடுப்பது பெருமளவு குறைந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே ஜீவநதியாக இருப்பது தாமிரபரணி, கோதை ஆகிய இரண்டு ஆறுகள் ஆகும். அந்த ஆறுகளில் இருந்துதான் தண்ணீர் கிணறுகள் மூலமாக எடுக்கப்பட்டு கன்னியாகுமரி மாவட்டம் முழுமைக்கும் பல்வேறு திட்டங்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். திருட்டுத்தனமாக யாருக்கும் தெரியாமல் மணல் எடுப்பதால் அங்குள்ள கிணறுகள் எல்லாம் சரிந்து விழுந்து கொண்டிருக்கின்றன. பாலங்களுக்குப் பக்கத்திலும், கிணறுகளுக்குப் பக்கத்திலும் 200 மீட்டர் தொலைவிலே மணல் எடுக்க வேண்டும் என்று சட்டம் இருந்தாலும்கூட தெரியாத வண்ணம் இரவு நேரங்களிலே வல்லங்களைக் கொண்டு வந்து மணல் திருடி கேரளாவுக்கு கடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி மணல் எடுப்பதனால் —இப்போது பார்த்தால்கூட தெரியும் — 15 அடி அளவில் ஆறுகள் தாழ்ந்து கிடக்கின்றன. 15 அடி அளவிலே தண்ணீர் தாழ்ந்துவிட்டபடியால் எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் பக்கத்திலே உள்ள கிணறுகளில் எல்லாம் தண்ணீர் அளவு 15 அடி தாழ்ந்து விட்டது. இப்படி மிகவும் மோசமாக இருக்கின்ற சூழ்நிலையிலே, எங்களுடைய மாவட்டத்திலே தேவை இல்லாத மணல் ஆயிரக்கணக்கான லோடுகள் அளவுக்கு பல இடங்களில் இருக்கிறது. அந்த மணலை அமைச்சரவர்கள் ஏலம் போட்டுக் கொடுத்து திருட்டுத்தனத்தை நிறுத்துவதுடன் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மணல் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற கன்னியாகுமரி மாவட்ட பகுதியிலே இருக்கிற குழித்துறை அது, வட்டார வழக்கில் வழங்கப்படும் தாமிரபரணி ஆறுதான் ஆற்று மணல் கிடைக்கும் முக்கிய சாத்தியக்கூறு ஆகும். அதில் 1992-ஆம் ஆண்டு மூன்று பேருக்கு பொது ஏலத்தில் குத்தகைக்கு மணல்

1995 ஏப்ரல் 19]

எடுக்க அனுமதி வழங்கப்பட்டது. மீதம் உள்ள பகுதிகளில் குவாரி செய்யக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அளவை நிர்ணயித்து இருக்கிறார்கள். குவாரி செய்ய அனுமதிக்கப்படாத இடங்களில் மணல் குவாரி செய்யப்படுகிறபோது, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. 1992-93-ஆம் ஆண்டில் 92 வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ.1,33,295 அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. 1993-94-ஆம் ஆண்டு 298 வாகனங்கள் கைப்பற்றப்பட்டு ரூ.4,61,884 அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு கள்ளத்தனமாக மணல் குடைவு செய்பவர்களுடைய வாகனங்கள் தீவிர சோதனை செய்யப்பட்டதன் விளைவாக அபராதம் 4 மடங்கு அதிகமாக—ஏற்கெனவே குறிப்பிட்டதைவிட 4 மடங்கு அதிகமாக—வசூலிக்கப்பட்டுள்ளது. பாலங்கள் மற்றும் மத்திய மாநில நிறுவனங்களின் குடிநீர் அமைப்புகள் மற்றும் கிணறுகள் ஆகியவற்றுக்கு 200 மீட்டர் சுற்றளவுக்குள் குவாரி செய்யக்கூடாது என்ற விதியை அரசு கடுமையாக கடைப்பிடித்து வருகிறது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் கள்ளத்தனமாக மணல் எடுப்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், காவல் துறைக் கண்காணிப்பாளரும் கடுமையாக சோதனை செய்து வருகிறார்கள். அதுமட்டுமல்ல, இதுபோன்ற காரியங்களில் யார் ஈடுபட்டாலும் அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது சட்டமன்ற உறுப்பினர்களுடைய கடமையாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இருக்கின்ற மணல் குவாரிகளை ஏலம் விடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அரசு எந்த எந்த இடங்களில் மணல் குவாரி எடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறதோ அந்த இடங்கள் போக மீதி இடங்களில் அரசு விதிகளுக்கு உட்பட்டு ஏலம் விடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 1992-ஆம் ஆண்டு பெய்த பெரும் மழையின் காரணத்தினாலே கீரிப்பாறை, பேச்சிப்பாறை, காளிகேசம் போன்ற இடங்களில் மலை இடிந்து வந்து பெருஞ்சாணி அணையில் 25 விழுக்காடு அளவுக்கு, ஆயிரக்கணக்கான லோடு மணல் விழுந்து கிடக்கிறது. அதுபோல் காளிகேசத்தில் இருக்கிறது, பேச்சிப்பாறையில் இருக்கிறது அந்த மணலை ஏலம் போட்டு கொடுக்க வேண்டும் என்று மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்தில் பலமுறை நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கூறியிருந்தேன். அந்த மணலை கொடுக்கிறபோது அரசுக்கு ஏராளமாக பணம் கிடைக்கும். மலை போல் மணல் குவிந்து இருப்பதால் டேமின் கொள்ளளவு பாதிக்கப்படுகிறது. 10 ஆயிரம் 20 ஆயிரம் லோடு அளவுக்கு மணல் அங்கே இருக்கிறது. அதைக் கொடுப்பதாக இருந்தால் அரசுக்கு பணம் வரும். டேமில் தண்ணீர் கொள்ளளவும் கூடுதலாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து அந்த மணலை

உடனடியாக ஏலம் போட்டுக் கொடுத்து கேரளாவுக்கு கடத்தப்படுவதை தடுத்து......

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. கேள்வியாகக் கேட்கவும்.

திரு. இரா. அப்பு நடேசன்: மணலை கேரளா மாநிலத்திற்கு எடுத்துச் செல்வதால்தான் கன்னியாகுமரி மாவட்டத்திலே மணல் தட்டுப்பாடு, இப்படிப்பட்ட சிரமங்கள் ஏற்படுகிறது. ஆகையால், இந்த மணலை ஏலம் போட்டுக் கொடுப்பதாக இருந்தால், கீரிப்பாறையிலும், காளிகேசத்திலும், பேச்சிப்பாறையிலும் இருக்கின்ற மணலை ஏலம் போட்டுக் கொடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய மணல் தட்டுப்பாட்டை நிறுத்தி, கீரிப்பாறை, பேச்சிப்பாறை, காளிகேசத்தில் உள்ள மணலை ஏலம் போட்டுக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிடுகின்ற பேச்சிப்பாறை அணை பொதுப்பணித் துறைக்குச் சொந்தமாக இருக்கிற காரணத்தால் பொதுப்பணித் துறையினுடைய அனுமதியோடு உரிய முறையில் ஏலம் விடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 352. திரு. தி. சாத்தையா, மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

352—

நெசவாளர் பாதிப்பைத் தடுத்தல்

***35392—**திரு. தி. சாத்தையா :*

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்த துணிகள் தேங்கி கிடப்பதாலும், கொள்முதல் செய்யப்பட்ட துணிகளுக்கு அரசிடமிருந்து தொகை வராததாலும் நெசவாளர் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,